**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 136** **நாள்: 07.09.2018**

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்டபட்ட பகுதிகளில் மத்திய / மாநில / பிற அரசுத்துறை சார்ந்த அலுவலர் / பணியாளர், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள், தொழில் புரிவோர், வணிகர்கள் ஆகியோரிடமிருந்து ஆறு மாதத்திற்கு ஒருமுறை தொழில் வரியினை வசூலிக்க சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி **1919** துணை விதி **138**ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி **1919** துணை விதி **110**ன் கீழ் நிறுவனங்களின் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் மூலதனத்தை பொறுத்து நிறும வரி செலுத்திட வேண்டும்.

**2018–2019** நிதியாண்டிற்குண்டான முதலாம் அரையாண்டிற்கான திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரியினை பின்வரும் அட்டவணையின்படி செலுத்தப்பட வேண்டும்.

**<u>அட்டவணை</u>**

| வ.எண். | அரையாண்டுக்கான சராசரி வருமானம் | | 01.10.2008 முதல் வசூலிக்கப்பட்டு வந்த அரையாண்டுக்கான தொழில்வரி ரூ. | 01.04.2018 முதல் திருத்தியமைக்கப்பட்ட அரையாண்டுக்கான தொழில்வரி ரூ. |
|---|---|---|---|---|
| | முதல் ரூ. | வரை ரூ. | | |
| 1 | 21,000 வரை | -- | -- | -- |
| 2 | 21,001 | 30,000 | 100/– | 135/– |
| 3 | 30,001 | 45,000 | 235/– | 315/– |
| 4 | 45,001 | 60,000 | 510/– | 690/– |
| 5 | 60,001 | 75,000 | 760/– | 1025/– |
| 6 | 75,001/– மற்றும் அதற்கு மேல் | – | 1095/– | 1250/– |

முதலாம் அரையாண்டிற்குண்டான தொழில் வரி மற்றும் நிறும வரியினை வரும் **30.09.2018**க்குள் செலுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி **1919**, துணை விதி **138–F**ன்படி அபாரதம் / வட்டி தொகை கணக்கீடு செய்து வசூலிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நடப்பு நிதியாண்டிற்கான முந்தைய தொழில்வரி ஏற்கனவே செலுத்தியவர்கள் திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரிக்கான வித்தியாசத் தொகையினை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சியின், அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெரு விளக்குகள், குப்பைகளை அகற்றுதல் போன்ற பணிகளை தொடர்ந்து செய்திட மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரிகளை உடனே செலுத்தி ஒத்துழைப்பு நல்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**